# பனிமயம்

ஜூன் 2022

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



உங்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

கடந்த 08.05.2022 ஞாயிறு நமது பேராலயத்தில் சந்த மரிய தஸ்நேவிஸ் மாதாவின் திருப்பெயரில் நடைபெற்ற 14 மண இணையர்களுக்கான **கூட்டுத் திருமண விழா**வை நமது பேராலய வரலாற்றின் சிறப்பு மிக்க ஒரு நாளாக மாற்றித் தந்த எல்லாம் வல்ல இறைவனுக்கும், நமது பனிமயத் தாய்க்கும் நன்றி நவில்கிறேன்.

தூத்துக்குடி மாநகரிலும், பிற இடங்களிலும் பல்லோராலும் பாராட்டப்பட்ட இந்த நிகழ்வுக்காக **ரூ. 23 இலட்சத்தை** நன்கொடையாகத் தந்த 212 குடும்பங்களுக்கும் நமது பாராட்டுகளும், ஆசிகளும்! இவர்களது தாராள உள்ளத்தை ஆண்டவர் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

இந்தத் திருமண விழா நம் அன்னைக்கு நாம் செலுத்திய மிகப் பெரிய நன்றி விழா. அந்தத் தாய்க்கு நாம் அணிவித்த ஒப்பற்ற பேராபரணம் என்பது பலரின் கருத்து. பனிமயத் தாயின்மீது நாம் கொள்ளும் உண்மையான அன்பு நமது பேச்சிலும், செபத்திலும் மட்டுமல்லாது, இது போன்ற அன்புச் செயல்களிலும் வெளிப்படும்போதுதான் நம் தாய் பெருமகிழ்வடைவார் என்பதே உண்மை. “இறையாட்சி பேச்சில் அல்ல, **செயல்பாட்டில்**தான் இருக்கிறது” (1 கொரி 4:20) என்கிறது இறைமொழி.

“நாம் சொல்லிலும் பேச்சிலும் அல்ல, **செயலில்** உண்மையான அன்பை விளங்கச் செய்வோம்” (1 யோவா 3:18) என்னும் அழைப்பை ஏற்று, அன்னையின் அன்புப் பிள்ளைகளாய் வாழ்வோமாக.

நம் அன்பின் அன்னை பனிமயத் தாயின் ஆசி உங்களோடு இருப்பதாக!

என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்



உதயம் 22 தாரகை 10

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருட்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

**குடும்பங்களுக்காக...**

உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவக் குடும்பங்கள் நிபந்தனையற்ற அன்பை உள்ளுணர்ந்து அனுபவிக்கவும் தங்கள் அன்றாட வாழ்வில் புனிதத்தில் முன்னேறவும் நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...

1. கண்ணீரின் தாய்! ....4
அருள் மரி வேந்தன்

2. மரியன்னை புனிதர்கள் :
புனித கரோலினா சான்டோகனாலே ....6
அருள்பணி. குமார்ராஜா

3. பனிமய அன்னை ....8
தி. சொர்ணராஜன் விக்டோரியா

4. பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்... ....10
செல்வராஜ் மிராந்தா

5. பனிமய சாட்சியங்கள் ....12

6. சந்த மரிய தஸ்நேவிஸ் மாதா கூட்டுத் திருமணம் ....13


7. விவிலியப் போட்டி ....17

8. பனிமயப் பகிர்வு ....20

9. நம் திருச்சபை, நமது பெருமை ....24
"க்றிஸ் மிலியன்"

மரியன்னையின் மேன்மைகள் : 28

# கண்ணீரின் தாய்!



விவிலியம் இறைவனைக் கண்ணீரைக் காணும் கடவுளாகக் காட்டுகிறது. “என் துன்பங்களின் எண்ணிக்கையை நீர் அறிவீர்; உமது தோற்பையில் என் **கண்ணீரைச்** சேர்த்து வைத்துள்ளீர்; இவையெல்லாம் உம் குறிப்பேட்டில் உள்ளன அல்லவா?” (திபா 56:8) என்று கடவுளை நோக்கிச் சொல்கிறார் திருப்பாடல் ஆசிரியர். எனவே, “என் தலைவராகிய ஆண்டவர் எல்லா முகங்களில் இருந்தும் **கண்ணீரைத் துடைத்து விடுவார்**; தம் மக்களுக்கு ஏற்பட்ட நிந்தையை இம்மண்ணுலகில் அகற்றிவிடுவார்; ஏனெனில், ஆண்டவரே இதை உரைத்தார்” என்பது எசாயா வழியாக கடவுள் தந்த ஒரு வாக்குறுதி.

புதிய ஏற்பாட்டிலோ ஆண்டவர் இயேசுவே கண்ணீர் சிந்திய காட்சிகளை நாம் காண்கிறோம். எடுத்துக்காட்டாக, தம் நண்பன் லாசர் இறந்தபோது, “இயேசு **கண்ணீர் விட்டு அழுதார்**” (யோவா 11:35) என்று பதிவு செய்துள்ளார் யோவான். இயேசுவே கண்ணீரின் அனுபவத்தைப் பெற்றிருந்ததால், அவர் தொடங்கி வைக்கும் புதிய அரசில் “அவர்களுடைய **கண்ணீர் அனைத்தையும் அவர் துடைத்து விடுவார்**. இனிமேல் சாவு இராது. துயரம் இராது, அழுகை இராது, துன்பம் இராது” (திருவெளிப்பாடு-21:4) என்று காட்சியில் கண்டார் யோவான்.

இந்த வரிசையில் அன்னை மரியாவும் கண்ணீர் சிந்துவதுபோல சில இடங்களில் காட்சி தந்திருக்கிறார். இதுவரையில் நம் திருஅவை இத்தகைய இரண்டு காட்சிகளை உண்மை என்று உறுதிப்படுத்தியுள்ளது. அவற்றில் முதலாவது 1953ஆம் ஆண்டு இத்தாலியின் சிராகுஸ் (Syracuse) என்ற இடத்தில் நிகழ்ந்த காட்சி. இரண்டாவது, 1988ஆம் ஆண்டு ஜப்பானிலுள்ள அகிட்டா என்னும் திருத்தலத்தில் நிகழ்ந்த காட்சி.

சிராகுஸ் கண்ணீரின் அன்னை நிகழ்வு சுவையானது. அமில்காரே சாந்தினி என்னும் இத்தாலிய ஓவியர் அன்னை மரியாவின் ஓவியம் ஒன்றை வரைந்து விற்பனை செய்துவந்தார். அந்த ஓவியங்களில் ஒன்று 21.03.1953 அன்று திருமணம் செய்த அன்றோனினா, ஆஞ்சலோ தம்பதியருக்குப் பரிசாக வழங்கப்பட்டது. அவர்களும் அந்தப் படத்தைத் தங்கள் இல்லத்தில் மாட்டி





வைத்தனர். அன்றோனினா கருவுற்றபோது, அடிக்கடி வலிப்பு மற்றும் தற்காலிக பார்வை இன்மை ஆகிய துன்பங்களுக்கு உள்ளானார். 29.08.1953 அதிகாலை வேளையில் இத்தகைய வலிப்பும், பார்வையின்மையும் ஏற்பட்டது. காலை 08.30 மணிக்கு அவருக்கு மீண்டும் பார்வை திரும்பியது. பார்வை பெற்றபோது, தமக்கு எதிரே இருந்த மரியன்னையின் படத்தை உற்றுநோக்கிய அன்றோனினா அதிர்ச்சியடைந்தார். அந்தப் படத்திலுள்ள அன்னை மரியாவின் கண்களிலிருந்து பொல பொலவெனக் கண்ணீர் வழிந்தோடியது. அவரது அலறலைக் கேட்டு ஓடிவந்த மற்றவர்களும் இந்தக் காட்சியைக் கண்டு வியந்தனர். அன்றைய நாளில் ஒரு சில தடவைகள் இந்தக் கண்ணீரின் காட்சி நடந்தது. அன்றோனிற்றாவின் நோயும் முற்றிலும் குணமாகியது. தொடர்ந்து, மக்கள் திரளாக அவர்களது இல்லம் வந்து அன்னையின் படத்தின் முன் செபிக்கத் தொடங்கினர். பல புதுமைகள் அங்கே நடந்தன.

தொடர்ந்து, குருக்களும், பேராயரும் வந்து ஆய்வு செய்தனர். மருத்துவர்கள் குழுவொன்று அந்தக் கண்ணீரை ஆய்வு செய்து மனிதக் கண்ணீரின் கூறுகள் அதில் இருப்பதாக சான்று பகர்ந்தது. குருக்களின் குழு அங்கே நடந்தது உண்மையான புதுமை என்று அறிக்கை தந்தது. அங்கே நடைபெற்றதாகச் சொல்லப்பட்ட 290 புதுமைகளை ஆய்வு செய்த மருத்துவக் குழு அவற்றில் 105 மருத்துவத்தால் விளக்க முடியாதவை என்று அறிக்கையிட்டது.

அன்னையின் கண்ணீரை முதன் முதலில் கண்ட அன்றோனிற்றாவுக்குத்தான் முதல் புதுமையும் நிகழ்ந்தது. அவரது வலிப்பு மற்றும் தற்காலிக பார்வையின்மை முற்றிலுமாக நின்றுவிட்டது. 25.12.1953 அன்று ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தார் அவர். அந்தக் குழந்தைக்குத் திருமுழுக்கு கொடுத்தவர் பேராயர் பரான்சினி.

மரியன்னை கண்ணீர் விட்ட இல்லமானது இன்று ஒரு சிற்றாலயமாக மாற்றப்பட்டுள்ளது. அதிக மக்கள் பங்கேற்கும் வண்ணம் “கண்ணீரின் அன்னை பேராலயம்” கட்டப் பட்டு, திருப்பீடத்தில் புதுமைப் படம் வைக்கப் பட்டுள்ளது.

1953 டிசம்பரில் நடைபெற்ற சிசிலி ஆயர் பேரவை மரியன்னை கண்ணீர் விட்டதாகக் காட்சி தந்த நிகழ்வை உண்மை என்று ஏற்றுக்கொண்டது. தொடர்ந்து, 17.10.1954 அன்று வத்திக்கான் வானொலியில் உரை நிகழ்த்திய திருத்தந்தை 12ஆம் பயஸ் “ஆயர் பேரவையின் அறிக்கையை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அந்தக் கண்ணீரின் பொருளை மானிட இனம் புரிந்து கொள்ளுமா?” என்று கேள்வி எழுப்பினார்.

உலகம் முழுவதும் மக்கள் படும் துன்பங்களின் வெளிப்பாடே அன்னையின் கண்ணீர் என்றும், கிறித்தவர்கள் செய்கிற பாவங்கள் மற்றும் அலட்சிய வாழ்வின் காரணமாகவே அன்னை கண்ணீர் சிந்துகிறார் என்றும் பொருள் கொள்ளப்பட்டது. எனவே, நமது செபமும், தவமும் அதிகரிக்க வேண்டும் என்பதே இந்த நிகழ்வு நமக்குத் தரும் பாடமாகும்.

**அருள் மரி வேந்தன்**

# புனித கரோலினா சான்டோகனாலே

(1852-1923)



## எளிமையை ஏற்ற அன்னையின் மகள்!

கடந்த மாதம் 15ஆம் நாள் நினைவிருக்கிறதா? உரோமையில் திருத்தந்தை பிரான்சிஸ் அருளாளர் தேவசகாயம் என்னும் தமிழ்க் கத்தோலிக்கரைப் புனிதராக அறிவித்தார் அல்லவா? அதே நாளில் இன்னும் 9 பேர் புனித நிலைக்கு உயர்த்தப்பட்டார்கள். அவர்களில் ஒருவர்தாம் “இயேசுவின் மரியா” என்று அழைக்கப்படும் புனித கரோலினா சான்டோகனாலே (Carolina Santocanale) என்னும் இத்தாலியப் புனிதை.

செல்வம் படைத்த உயர்குடியில் பிறந்தாலும், இயேசுவால் ஈர்க்கப்பட்டு, அனைத்தையும் துறந்து எளிய வாழ்வும், மறைந்த வாழ்வும் வாழ்ந்தவர் இப்புனிதை. இவரைப் புனித வாழ்வுக்கு எடுத்துக் காட்டாகத் தந்துள்ளது நம் திருஅவை. இவரது புனித வாழ்வுக்கு நற்கருணையும், மரியன்னை பக்தியுமே ஊட்டமளித்தன. இப்புனிதையைப் பற்றிப் பேசும்போது “தம் சொகுசு வாழ்வை விட்டுவிட்டு ஏழ்மை வாழ்வைத் தேர்ந்தெடுக்க அவருக்கு வலிமையளித்தது இயேசுவின் நற்கருணையே” என்று அவரைப் பாராட்டியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். லூர்து அமலோற்பவ கப்புச்சின் சகோதரிகள் என்னும் துறவற சபையைத் தோற்றுவித்த பெருமைக்குரியவரான இவர், நவீன காலத்தின் துறவு அர்ப்பணத்துக்கு சான்றாக விளங்குகிறார்.

இத்தாலியிலுள்ள பாலெர்மோ என்னும் இடத்தில் 02.10.1852 அன்று செல்வம் நிறைந்த உயர்குடியில் பிறந்தார் கரோலினா சான்டோகனாலே. சிறிய வயதிலேயே இறைப் பற்று நிறைந்தவராக வளர்ந்தார். பதின்பருவத்தில் அவர் வயதையொத்தவர்கள், கேளிக்கை, விளையாட்டுகளில் ஈடுபட்டபோது, கரோலினாவின் எண்ணம் பிறரன்புப் பணிகளின்மீது நாட்டம் கொண்டது.

இறைத் திருவுளத்தால் அருள்பணி. மவுரோ வெனுட்டி அவருக்கு ஆன்ம குருவாகக் கிடைக்கப் பெற்றார். அவரது வழிகாட்டுதலில் தன் பணிகளை முன்னெடுத்தார் கரோலினா. வாழ்நாள் முழுவதும் பிறரன்புப் பணிகள் ஆற்றுவதே தன் வாழ்வின் இலக்கு என்பதை அவர் உறுதியுடன் நம்பினார்.

அவரது 19ஆம் வயதில் துறவியாகும் எண்ணம் வந்தது. எந்த வகையான துறவு வாழ்வு என்பதில் கரோலினாவுக்குக் குழப்பம் ஏற்பட்டது. முழு நேரமும் தவத்திலும், செபத்திலும் ஈடுபடும் அமைதித் துறவியாகலாமா, அல்லது எளியோருக்குப்

பணிவிடை செய்யும் நற்செய்தி அறிவிப்பின் துறவியாகலாமா என்று முடிவெடுக்கத் திணறினார். அவரது பங்குத் தந்தையின் அழைப்பை ஏற்று, 21ஆம் வயதில் தமது பங்கின் இளம்பெண்கள் சபைக்குத் தலைவியானார். 15 ஆண்டுகள் இந்தப் பொறுப்பில் சிறப்பாகப் பணியாற்றினார். பங்கிலுள்ள ஏழை, எளியோருக்கு அறப் பணிகள் செய்துவந்தார். குழந்தைகளுக்கு மறைக்கல்வி கற்றுக்கொடுப்பதில் ஆர்வம் காட்டினார். தனது துறுதுறுப்பான நடவடிக்கைகளால் இளம்பெண்களையும் ஈர்த்தார். இந்த ஈர்ப்பே பிற்காலத்தில் பெண்களுக்கான ஒரு துறவற சபையைத் தோற்றுவிக்க உதவியது.

அவரது வாழ்வின் திருப்பு முனை நிகழ்வு 35ஆம் வயதில் நிகழ்ந்தது. பிரான்சிஸ்கன் சபையில் துறவியாக விரும்பி அச்சபையில் சேர்ந்துகொண்டார். தமது பெயரையும் “இயேசுவின் மரியா” என்று மாற்றிக் கொண்டார். ஆண்டவர் இயேசு, அன்னை மரியாமீது அவர் கொண்டிருந்த பேரன்பை இப்பெயர் மாற்றம் வெளிப்படுத்தியது.

துறவியாக அவர் ஆற்றிய அறப் பணிகள் பலரின் கவனத்தையும் ஈர்த்தன. எனவே, 1909ஆம் ஆண்டு, தமது 51ஆம் வயதில், கரோலினா புதிய துறவற சபை ஒன்றைத் தொடங்கி, லூர்து அமலோற்பவ கப்புச்சின் சகோதரிகள் என்று பெயரிட்டார். இன்று அவரது சகோதரிகள் இத்தாலி, அல்பேனியா, பிரசில், மடகாஸ்கர் ஆகிய நாடுகளில் ஆர்வத்துடன் இறைப்பணியாற்றி வருகிறார்கள்.

எளியோருக்கான அறப்பணிகள் செய்யாத நேரம் அனைத்தையும் இறைவேண்டலில் செலவிட்டார் கரோலினா. நற்கருணை ஆண்டவருடன் உரையாடுவதும், லூர்து அன்னையிடம் மன்றாடுவதும் அவருக்குப் பெரிய மகிழ்ச்சியைத் தந்தன. லூர்து அன்னையின்மீதுள்ள பாசத்தால்தான் தாம் தொடங்கிய சபைக்கு லூர்து அமலோற்பவ சகோதரிகள் என்று பெயரிட்டார். அன்னை மரியாவைப் போல ஏழ்மை நிலையை விரும்பி ஏற்றுக்கொண்டார். தமது குடும்பத்தின் செல்வம், செல்வாக்கு, வலிமை எதையுமே அவர் பெரிதாக மதிக்கவில்லை. உடல் துன்பத்தின் சிலுவைகளையும் பொறுமையுடன் தாங்கிக்கொண்டார். இவ்வாறு, அன்னையின் அன்பு மகள் என்பதை எண்பித்தார். இறந்து 100 ஆண்டுகளே ஆனாலும், அவரைப் பற்றிய தகவல்கள் அதிகம் இல்லை என்பது அவரது எளிய வாழ்வுக்கு ஒரு சான்றாகக் கருதப்படலாம்.

இறக்கும் முன்னர் ஆண்டவர் இயேசு, அன்னை மரியா, புனித யோசேப்பு மூவரிடமும் வேண்டினார் என்று அருகிருந்தோர் சான்று பகிர்ந்தனர்.

தனது துறவற சபைக்கு திருத்தந்தையின் ஏற்பிசைவு பெற்றார். 1923ஆம் ஆண்டு தமது 71ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார். 2016ஆம் ஆண்டு அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். கடந்த மாதம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் புனிதர் என அறிவிக்கப்பட்டிருக்கிறார்.

துறவறம் நாடுவோர் அனைவருக்கும் பாதுகாவலர் என்று அழைக்கப்படத் தகுதியுள்ளவர் கரோலினா. லூர்து அமலோற்பவத்தைத் தனது துறவற அவையின் பெயரிலேயே கொண்டிருந்த, இந்தப் புனிதையைப் பின்பற்றி நாமும் அன்னை மரியா காட்டும் எளிமை, பிறரன்புப் பணிகள், இயேசுவின்மீது ஆழ்ந்த பற்று கொண்டு வாழ்வோமாக!



அருள்பணி. குமார்ராஜா

பனிமய அன்னை 20

# பசிலிக்கா

**ஆலய மணியின் ஆனந்த கீதம்**

ஆலய மணிகள் ஓசை இசைத்து,
ஆனந்த கீதமாய் இன்னிசை முழங்க . . . ,
அலை கடலென மக்கள் கூட்டம்
அக்களிப்போடு ஒரே இலக்கை நோக்கி
விரைந்தோட . . . ,
அனைவரின் உள்ளங்களிலும் ஒரே
சிந்தனை ....

'பரதர் மாதா'வாக, 'ஏழு கடற்றுறையின் ஏக அடைக்கலத் தாயாக', 'பனிமய மாதா'வாக அனைத்து மக்களுக்கும் அன்புத் தாயாக, அரவணைக்கும் அன்னையாக, மோட்சலோக சிம்மாசனம் போன்ற திருப்பீடத்தில் தங்கமயமாய் கொலுவீற்றிருக்கும் **'பனிமய அன்னை'** திருக்கோயில் கொண்டிருக்கும் ஆலயம், இன்று **'பேராலயம்'** என்ற உன்னத நிலைக்கு உயர்த்தப்படவுள்ளது.

ஆலயம் கட்டப்பட்ட நாள் முதலே, **'பெரிய கோவில்'** என்று வாஞ்சையோடு அனைவராலும் அழைக்கப்பட்டு வரும் இவ்வாலயம், என்றுமே பேராலயந்தான்!

**ஆயை பூர்வீகம்**

1582-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5-ஆம் நாளன்று தூத்துக்குடியில் **'சம்பவுல் கல்லூரி'** என்று அழைக்கப்பட்ட இயேசு சபைத் தலைமை இல்லத்திற்காக, அந்த இல்லத்திற்கு அருகே கட்டப்பட்ட ஆலயம் **'இரக்கத்தின் மாதா'**விற்காக (Senhora Da Piedade) அர்ப்பணிக்கப்பட்டது.

இந்த **'இரக்கத்தின் மாதா ஆலயம்'** உரோமை பனிமய அன்னை திருநாளன்று திறந்து வைக்கப்பட்டதால், காலப் போக்கில் மக்கள் அனைவராலும் **'பனிமய அன்னை ஆலயம்'** என்று அழைக்கப்பட்டது.

டச்சுக்காரர்களின் வன்முறை செயல்களால் 1695-ஆம் ஆண்டில் முற்றிலும் தகர்க்கப்பட்ட அன்னையின் ஆலயம், 1713-ஆம் ஆண்டில் சுவாமி **விஜிலியுஸ் மான்சி** என்பவரின் தளராத முயற்சியினால் மீண்டும் புதிதாகக் கட்டப்பட்டது.

**புராதன ஆலயம்**

பனிமய அன்னையின் ஆலய வரலாறும், முத்துக்குளித்துறையின் திருமந்திரநகராம் தூத்துக்குடியின் வரலாறும் ஒன்றோடு ஒன்று இணைந்து பிரிக்க முடியாதவை ஆகும்.

தூத்துக்குடி மக்களால் **'பெரிய கோவில்'** என்று வாஞ்சையோடு அழைக்கப்படும் பனிமய அன்னை ஆலயம், ஆதியிலிருந்து இன்று வரை, சாதி மத பேதமின்றி மக்கள் அனைவர்க்கும் ஓர் அன்பு சமூக இடமாக திகழ்கின்றது.

தூத்துக்குடி நகரின் திருமறை வரலாற்றில் சிகரமாக விளங்குவது, பனிமய அன்னையின் ஆலயமும் அங்கு கொலு வீற்றிருக்கும் அன்னையின் அற்புத திருவுருவமும்தான்!

தமிழகத்தில் மரியன்னையின் மகிமைக்காக எழுப்பப்பட்ட ஆலயங்களில், தூத்துக்குடி பனிமய அன்னை ஆலயம் பழமைப் புகழும் வரலாற்றுச் சிறப்பும் மிக்கதாகும்!

1733-ஆம் ஆண்டில் இயேசு சபைத் தலைவர் **பிரான்சிஸ்கோ ரெட்ஸ்** என்பவருக்கு சமர்ப்பித்த இயேசு சபை அறிக்கையில் **சுவாமி ஜான் அந்துனஸ்**, பனிமய அன்னை ஆலயத்தை ஒரு **'பேராலயம்'** (Basilica) என்று பெருமையோடு அழைத்துள்ளார்.

**உரோமை பேராலயத்தின் ஓர் அங்கம்**



பாப்பரசர் 23-ஆம் அருளப்பர் (Pope John XIII, 1958-1963), 1960-ஆம் ஆண்டு மார்ச் 31-ஆம் நாளன்று தூத்துக்குடி பனிமய அன்னை ஆலயத்தை, பரிசுத்த நகராம் உரோமாபுரியில்

**எஸ்கலின் குன்றின்** (Mount Esquiline) மீது அமைந்திருக்கும் **'மேரி மேஜர்'** (St. Mary Major) பேராலயத்தின் ஓர் அங்கமாக இணைத்து அங்கீகரித்தார்.


**மேதகு தாமஸ் பர்னாந்து ஆண்டகை**யின் முயற்சியினால் உரோமை நகர் **'மேரி மேஜர்'** பேராலயத்துடன் இணைக்கப்பட்ட தூத்துக்குடி பனிமய அன்னை ஆலயத்திற்கு உரோமை பேராலயத்திற்குரிய சகல ஞானப் பலன்களும், சலுகைகளும் கிடைக்கப் பெறும் பேற்றினை, பாப்பரசர் 23-ஆம் அருளப்பர் வழங்கினார்.



**பேராலயமாக பிரகடனம்**

1582-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5-ஆம் நாளன்று **சம்பவுல் கல்லூரி ஆலய**மாக கட்டப்பட்ட தேவ அன்னை ஆலயம் காலப்போக்கில் மக்கள் அனைவராலும் வரலாற்றுக் குறிப்பேடுகளிலும் பனிமய அன்னை ஆலயம் என்று அழைக்கப்பட்டு, 1982-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 5-ஆம் நாளன்று தனது **நானூறாவது ஆண்டின் நிறைவு விழா**வினைக் கொண்டாடியது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த நிகழ்வின் இனிய நினைவாக, **பாப்பரசர் 2-ஆம் அருள் சின்னப்பர்** (Pope John Paul II, 1978-2005), 1982-ஆம் ஆண்டு ஜூலை 30-ஆம் நாள் வழங்கிய 'Pervenuta Illa Dei Beatissimae Genitricis Effigies' என்ற பத்திரத்தின் மூலம், தூத்துக்குடி பனிமய அன்னை ஆலயத்தை **'பேராலயம்'** (Basilica) என்ற சிறப்பு நிலைக்கு உயர்த்தினார்.



இந்திய திருநாட்டில் 15 தலங்களில் கிறிஸ்தவ ஆலயங்கள் பனிமய அன்னையின் மகிமைக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. அவை:

1. பள்ளிபோர்ட் (கோட்டாபுரம் மறைமாவட்டம்) - 1507
2. ராச்சோல் (கோவா மறைமாவட்டம்) - 1560
3. தூத்துக்குடி (தூத்துக்குடி மறைமாவட்டம்) - 1582
4. ராயா (கோவா மறைமாவட்டம்) - 1699
5. கள்ளிகுளம் (தூத்துக்குடி மறைமாவட்டம்) - 1885
6. ராயப்பன்பட்டி (மதுரை மறைமாவட்டம்) - 1932
7. சாத்தரசன்பட்டி (சிவகங்கை மறை மாவட்டம்) - 1932
8. ஆசரிபள்ளம் கீழ் (கோட்டார் மறை மாவட்டம்) - 1940
9. பெரம்பலூர் (கும்பகோணம் மறைமாவட்டம்) - 1944
10. சிந்தாமணி (தூத்துக்குடி மறைமாவட்டம்) - 1950
11. தாமரைகுளம் (கோட்டார் மறைமாவட்டம்) - 1966
12. உடையார்ப்பட்டி (திருச்சி மறைமாவட்டம்) - 1974
13. பட்டரிவிள்ளை (கோட்டார் மறை மாவட்டம்) - 1979
14. மறவன்குடியிருப்பு (கோட்டார் மறைமாவட்டம்) - 1983
15. தடிகாரன் கோனம் (கோட்டார் மறைமாவட்டம்) - 1966

மேற்கூறிய 15 பனிமய அன்னை ஆலயங்களில், தூத்துக்குடி திருநகரில் மங்காப் புகழ் கொண்டுள்ள பனிமய அன்னையின் ஆலயம்தான் **'பேராலயம்'** (Basilica) என்ற மணி மகுடம் சூட்டப்பட்டுள்ளது.



**தி. சொர்ணராஜன் விக்டோரியா**



# 13 பனிமய அன்னை பேராலய

## மலரும் நினைவுகள்...

இருப்பவைகளைக் கொண்டே இல்லாதவைகளை உருவாக்கலாம் என்ற மனவுறுதியோடு அருள்தந்தை ஜோப் டி ரோஸ் அவர்கள் தனது பெரும் முயற்சியால் உருவாக்கப்பட்ட தஸ்நேவிஸ் மாதா பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கூடம், சகல உள்கட்டமைப்புக் குறைபாடுகளையும் சமாளித்துக் கொண்டு, பங்கு மக்களின் பேராதரவோடு முன்னேற்றப் பாதையில் வெற்றிநடை போட ஆரம்பித்தது. அதன் வளர்ச்சிக்கு அன்னையின் அருளாசியே பெருந்துணையாக இருக்கலாம். இன்று தூத்துக்குடி பெருநகரில் இயங்கிக் கொண்டிருக்கும் கல்வி நிலையங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றாகத் திகழ்கின்றது.

அன்னையின் ஆலயத்திற்கு ஏதாவது செய்ய வேண்டுமே என்ற அருள்தந்தையின் ஆதங்கப் பார்வை சின்னமணிக் கூண்டின் மேல் விழுந்தது. ஒருபக்கம் வானளாவி நிற்கும் உயர்ந்த கோதிக் பாணி கோபுரம், மறுபக்கம் ஒரு சிறு மணிக்கூண்டு! சிந்தித்தார் - சிலரோடு ஆலோசித்தார்.

பலர் பலவிதமான ஆலோசனைகளும் அறிவுறுத்தல்களும் கொடுத்து அருள்தந்தை அவர்களின் செவிப்புலனையும் சிந்தனைத் திறனையும் சீண்டித் துளைத்துவிட்டனர். ஒரு கட்டிடப் பொறியாளர் “தெற்குப் பக்கம் இருக்கும் கோதிக் கோபுரம் போல ஒரு கோபுரம் எழுப்பினால் ஆலயமுகப்பு கலைநயத்தோடு காட்சிதரும்” என்ற ஒரு யோசனை ஏற்புடையதாகத் தோன்றினாலும் அதற்கு வேண்டிய பெரும் பணமுதலீடும் கட்டி முடிக்க ஆகும் காலவிரயமும் அடிகளாருக்கு மலைப்பைக் கொடுத்ததாம். எவ்வளவு உயரம் எழுப்ப முடியுமோ எழுப்பிவிட்டு நிறுத்துங்கள். பின்வரும் தந்தையர் காலத்தில் அது எப்படியும் முழுமை பெற்றுவிடும் என சிலர் அதற்கு ஆதரவாகப் பேசினர்.

சீரோ மலபார் கத்தோலிக்க சபையைச் சேர்ந்த திரு. S.J. ஆலப்பாடு என்பவர் பணி நிமித்தம் அப்போது தூத்துக்குடிக்கு வந்தவர் நண்பன் என்ற முறையில் கட்டுரையாளரை சந்தித்தார். திரு. ஆலப்பாடு கல்கத்தாவில் ஒரு பெரிய கட்டுமான நிறுவனத்தில் பொறியியல் துறையில் உயர் பதவியில் இருந்தவர். கட்டுரையாளர் பத்தாண்டு காலம் கேரளத்தில் பணியாற்றியபோது, திரு. ஆலப்பாடு மலபாரில் ஏதோ ஒரு பாலம் கட்டும் பணியை மேற்பார்வையிட வந்திருந்தபோது கட்டுரையாளர் தங்கியிருந்த விடுதியில் நான்கைந்து வாரம் தங்கியிருந்தபோது பரிச்சயமானவர். அருள்தந்தையிடம் அவரை அறிமுகப்படுத்தி ஆலோசனை கேட்டபோது, தேவையான கட்டுமானப் பொருட்கள், கட்டுமான கூலி (சிமின்டு விலை அப்போது மூடை ரூ.21 முதல் 25க்குள் தான் இருந்தது) அவைகளனைத்தையும் கணக்குக் கூட்டி ஒரு பெருந்தொகையைச் சொல்ல அதோடு சரியான முறையில் கட்டிமுடிக்க முன்பின் குறைந்த அளவு இரண்டு ஆண்டுகள் ஆகும் எனக் கூற அருள்தந்தை மலைத்துப் போனார்கள்.



அதன்பிறகு என்ன நடந்ததோ - யார்யார் ஆலோசனை வழங்கினார்களோ தெரியாது. எதிர்பாராத விதமாக சின்னமணிக் கோபுரக் கட்டுமானப் பணி தொடங்கியது. மளமளவென வளரத் தொடங்கிய கோபுரம் கட்டி முடிக்கப்பட்டபோது பரிசுத்த பனிமய அன்னையின் தங்கத் தேரின் மேல்பாகத்தின் வடிவில் இருந்தது. இன்றுவரை அதில் ஒரு மாற்றமும் ஏற்படவில்லை.

அருள்தந்தை விஜிலியுஸ் மான்சி 18ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் 'பரோக்' பாணியில் கட்டி எழுப்பிய அன்னையின் ஆலயம், காலச் சுழற்சியில் படிப்படியாக பல வடிவ மாற்றங்களை பெற்றிருந்தாலும் இன்று கட்டடக்கலைகளின் ஒரு சங்கமத்தின் கம்பீரமாக காட்சி தருகிறது.

அருள்தந்தை ஜோப் டி ரோஸ் அடிகளார் தனது ஐந்தாண்டு கால பங்குப் பணித்தள மேய்ப்பனாகப் பணியாற்றிய காலத்தில் பங்கு மக்கள் நலனுக்காக செய்தவற்றுள் தலையாயதாகக் கருதப்படுவது அவர் அரும் பாடுபட்டு தொடங்கிய தஸ்நேவிஸ் மாதா பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கூடம்தான். காரணம் மேல்தட்டு நடுத்தட்டு மக்கள் தங்கள் பெண்பிள்ளைகளை ஆங்கில வழிக் கல்விக்காக தேடி அலைந்து சேர்த்து வருவது போல் அல்லாமல் அடித்தட்டு மக்களின் பெண் பிள்ளைகள் அடிப்படைக் கல்விகூட கிடைக்காமல் இருந்த நிலையை களைந்தது. பொருளாதார ஏற்றத்தாழ்வுகளில் கீழ்நிலையில் அன்றாடங்காய்ச்சிகளாக விதைக்காமல் உழைப்பால் அறுவடை செய்யும் மீன்பிடித் தொழிலில் இருப்போரின் குழந்தைகளுக்கு பெரும்பாலும் அடிப்படைக் கல்விகூட எட்டாக்கனியாக இருந்ததுதான். அத்துறையில் அவர் ஆற்றிய பணி என்றும் நினைவுகூரத் தக்கது.

தொடரும்....

**செல்வராஜ் மிராந்தா**



## வழியனுப்புகிறோம்!

பேராலயப் பங்கின் உதவிப் பங்குத் தந்தையாகப் பணியாற்றி, நாகலாபுரம் உதவிப் பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டிருக்கும் அருள்பணி. **விமல்ஜேன்**, களப் பணியாளராக சிறப்பாகப் பணியாற்றி, சென்னை, பூவிருந்தவல்லி திருஇதயக் குருமடத்தில் இறையியல் பயிலச் செல்லும் சகோ. **அசாத்** இருவரையும் வாழ்த்தி, வழியனுப்புகிறோம்.

## வரவேற்கிறோம்!

பேராலயப் பங்கின் புதிய உதவிப் பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டிருக்கும் அருள்பணி. **பவுல் ரோமன்**, களப் பணியாளராக நியமிக்கப்பட்டிருக்கும் அருள்சகோ. **பெல் கிளிண்டன்** இருவரையும் அன்போடு வரவேற்கிறோம். பனிமயத் தாயின் திருத்;தலத்தில் உங்கள் வாழ்வும், பணியும் சிறக்கட்டும்!

# பனிமய சாட்சியங்கள்



**பனிமய சாட்சியம் : 58**

### ஏஞ்சல். ஜா. தூத்துக்குடி.

நான் பனிமய மாதா பங்கு அன்னை தெரசா அன்பியத்தைச் சேர்ந்தவள். என் பெற்றோர் பெயர் ஜான்சன் - ருபிதா. நான் 10ஆம் வகுப்பு படிக்கும்போதே மீன்வளக் கல்லூரியில் பட்டப் படிப்பு படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். கடந்த ஆகஸ்ட் மாதம் கல்லூரிக்கு விண்ணப்பம் போட்டேன். தொடர்ந்து நம் மாதா கெபியில் தினமும் செபமாலை செபித்து வந்தேன். ஒருநாள் கனவில் மாதா வந்து ஒரு தாளைத் தந்தார்கள். அதில் என் பெயர் 12வது இடத்தில் இருந்தது. நவம்பர் மாதத்தில் முதல் கவுன்சலிங் முடிவு வந்தது. அதில் என் பெயர் வரவில்லை. அக்டோபர் மாதத்தில் இரண்டாம் ரிசல்ட் வந்தது. அதிலும் என் பெயர் இல்லை. ஆனால் நான் மனம் தளராமல் இயேசுவிடமும் மாதாவிடமும் மன்றாடி வந்தேன். டிசம்பர் 31 ஆம் தேதி மூன்றாம் ரிசல்ட் வந்தது. என்னே வியப்பு! அதில் என் பெயர் 12 வது இடத்தில் இருந்தது. ஜனவரி 1ஆம் தேதி கவுன்சலிங்கில் கலந்துகொண்டேன். தூத்துக்குடி கல்லூரியிலேயே எனக்கு இடம் கிடைத்துவிட்டது. மாதாவின் புதுமையை எண்ணி வியக்கிறேன். இயேசுவுக்கே நன்றி! மரியே வாழ்க!



**பனிமய சாட்சியம் : 59**

### விஜயகுமார் – ரஜிதா, சென்னை.

நமது பேராலயத்தைத் தேடி வந்த சென்னைத் தம்பதியர் தங்களது சாட்சியத்தைப் பகிர்ந்துகொண்டனர். 2015ஆம் ஆண்டு திருமணம் செய்த இந்தத் தம்பதியர் நான்கு ஆண்டுகளாகக் குழந்தையில்லாமல் இருந்தனர். 2019ஆம் ஆண்டு தற்செயலாகத் தூத்துக்குடியில் உள்ள தாத்தா வீட்டுக்கு வரும்போது பனிமய அன்னையின் பேராலயம் வந்து அன்னையிடம் குழந்தைச் செல்வத்துக்காக மன்றாடியுள்ளனர், ஆறு ஆண்டுகள் கழித்து இசாண்டா காபிரியேலா என்னும் அன்பு மகள் 2021 ஜூலை மாதம் பிறந்தாள். பெருந்தொற்று காரணமாக உடனடியாக அன்னையின் பேராலயம் வர இயலவில்லை. கடந்த மாதம் குழந்தையோடு வந்து பனிமயத் தாய்க்கு நன்றி காணிக்கை செலுத்தினார்கள். இயேசுவுக்கே நன்றி! பனிமய அன்னையே வாழ்க!

# சந்த மரிய தஸ்நேவிஸ் மாதா கூட்டுத் திருமணம்

## 08.05.2022 ஞாயிறு

எல்லாம் வல்ல இறைவன் திருவருளால், மூவோர் இறைவனுக்கு மாட்சியாகவும், பனிமய அன்னைக்கு சீர்மிகு வாழ்த்தாகவும் தூத்துக்குடி மறைவட்டத்தைச் சேர்ந்த நலிந்த குடும்பங்களின் 14 மணஇணையர்களுக்கு கடந்த 08.05.2022 ஞாயிறு மாலை 04.00 மணிக்கு நமது தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் மேதகு ஸ்டீபன் ஆண்டகை அவர்களின் தலைமையில் கூட்டுத் திருமணமும், தொடர்ந்து வரவேற்பு மற்றும் திருமண விருந்து வைபவங்களும் நடைபெற்றன. வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்நிகழ்வின் காலக் கண்ணாடி இதோ:

- ★ பேராலயப் பங்கின் சார்பாக எளியோருக்கான கூட்டுத் திருமணங்கள் நடத்தலாம் என்று 22.02.2021 அன்று நடைபெற்ற பேராலயப் பங்கு மேய்ப்புப் பணிக்குழுவில் பரிந்துரைக்கப்பட்டது. 2022 மே மாதம் தூத்துக்குடி **மறைவட்ட அளவிலும்,** மறைமாவட்ட நூற்றாண்டு விழா நடைபெறும் 2023 செப்டம்பரில் **மறைமாவட்ட அளவிலும்** கூட்டுத் திருமணம் நடத்தலாம் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்கென பங்குத் தந்தையின் தலைமையில் 15 பேர் கொண்ட துணைக்குழு உருவாக்கப்பட்டது.
- ★ இந்தக் கூட்டுத் திருமணக் குழு 19.03.2021 மற்றும் 13.10.2021 ஆகிய நாள்களில் கூடி கூட்டுத் திருமணப் பங்கேற்பாளர்களுக்கான தகுதிகள், மண இணையர்கள் பேராலயத்திலிருந்து பெறுபவை ஆகியன பற்றி முடிவுகள் எடுத்தது. அதன்படி ஒவ்வொரு ஜோடிக்கும் ரூ. 2 இலட்சம் செலவழிப்பது என்றும், எளிய குடும்பங்கள் மற்றும் ஆடம்பரமின்றி திருமணம் நடத்த விரும்புவோரைப் பங்குத் தந்தையர் பரிந்துரைக்கலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது.



ராஜன் - ஜெபா



மிக்கேல் ராஜ் - டெய்சி







சாந்தீபன் - மெல்ஜின்

★ பனிமய அன்னையின் பெயரால் நடத்தப்படவிருக்கும் இத்திருமணத்திற்கு மேதகு ஆயர் ஸ்டீபன் அவர்களின் அனுமதியும், ஆசியும் வேண்டப்பட்டது. மேதகு ஆயர் அவர்களும் 20.10.2021 தேதியிட்ட கடிதத்தில் கூட்டுத் திருமணத்திற்கான ஒப்புதலும், ஆசியும் வழங்கினார்கள். இத்திருமணத்தில் பங்கேற்போர் "திருமணத்திற்குப் பிறகு மறுபடியும் சீதனம் கேட்காதவர்களாக இருத்தல் நல்லது" என்று பரிந்துரைக்கவும் செய்தார்கள்.



தஸ்நேவிஸ் டெனிசாந்த்
பாக்கிய சத்திய லிவினா

★ அதைத் தொடர்ந்து, தூத்துக்குடி மறைவட்டத்திலுள்ள அனைத்துப் பங்குத் தந்தையருக்கும் 22.10.2021 தேதியிட்ட மடல் அனுப்பப்பட்டது. அதில் கூட்டுத் திருமணம் பற்றிய விபரங்கள் இணைக்கப்பட்டிருந்தன. அந்த மடலைக் கோவிலில் அறிக்கையிடவும், தகுதியுள்ள மணஇணையர்களைப் பரிந்துரை செய்யவும் பங்குத் தந்தையர் கேட்டுக்கொள்ளப்பட்டனர். மண இணையர்களைப் பரிந்துரை செய்வதற்கான மாதிரிப் படிவமும் அனுப்பப்பட்டது.

★ 2022 ஜனவரி வரை ஏழு ஜோடி மணமக்கள் மட்டுமே பரிந்துரை செய்யப்பட்டிருந்ததால், இன்னும் 3 ஜோடிகளைப் பரிந்துரைக்கலாம் என 34 பங்குத் தந்தையருக்கும் 27.01.2022 அன்று மறு கடிதம் அனுப்பப்பட்டது.



காட்சன் - நந்தினி

★ அதைத் தொடர்ந்து, கூடுதலாக 7 ஜோடிகளைப் பங்குத் தந்தையர் பரிந்துரைத்ததால், மொத்தம் 14 மணஇணையர்கள் கூட்டுத் திருமணத்திற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டனர். இவர்களிடமிருந்து "சீதனம் கேட்க மாட்டோம், திருமண விழாவை ஆடம்பரமின்றிக் கொண்டாடுவோம்" என்று மேதகு ஆயர் அவர்களுக்கு உறுதி வழங்கி எழுதிய உறுதிமொழிப் பத்திரம் பெறப்பட்டது.



ஆகாஷ் - சிந்துஜா

★ 23.04.2022 அன்று மணமக்களும், அவர்தம் பெற்றோரும் பேராலயத்திற்கு அழைக்கப்பட்டனர். மணமக்களுக்கான **சேலை, சட்டை, பேன்ட் துணிகள்,** தையல் செலவுக்கென தலா **ரூ. 2000,** ஒவ்வொரு மணவீட்டிற்கும் **25 அழைப்பிதழ்கள், 25 விருந்து டோக்கன்கள்** ஆகியன ஒப்படைக்கப்பட்டன. திருமணத்திற்கு முன்பு, திருமண நாள் அன்று, திருமணத்திற்குப் பின்னர் செய்ய வேண்டிய பணிகள் அறிவுறுத்தப்பட்டன.





★ 01.05.2022 முதல் 08.05.2022 வரை 8 நாள்கள் பனிமய அன்னை பேராலயத்தில் ஒவ்வொரு திருப்பலியிலும் மணமக்களுக்காகத் **தொடர் மன்றாட்டு** நடைபெற்றது. மணமக்களுக்காகவும், கூட்டுத் திருமண நன்கொடையாளர்களுக்காகவும் திருமணத்திற்கு முந்தின நாள் (07.05.2022) சனிக்கிழமை நண்பகல் 11.30 முதல் 03.00 மணி வரையில் சிறப்பு **நோன்பு வழிபாடு** நடத்தப்பட்டது.

★ திருமண நாளான 08.05.2022 ஞாயிறு அன்று பேராலய வளாகமே விழாக்கோலம் பூண்டது. பதாகைகள், வரவேற்பு வளைவுகள், வாழை மரங்கள், தோரணங்கள் கட்டப்பட்டன. **பிற்பகல்** 02.30 மணிக்கு மணமக்களும், உறவினர்களும் பேராலய வளாகம் வந்துசேர்ந்தனர். அனைவருக்கும் தேநீர் அல்லது குளிர்பானம் வழங்கப்பட்டது. பிற்பகல் 03.30க்கு அருள்தந்தையர், அருள்சகோதரிகள் புடைசூழ பேராலயப் பங்கின் பக்த சபையினர் மணமக்களையும், உறவினர்களையும் பேராலயத்தைச் சுற்றி பேன்ட் வாத்தியத்துடன் பவனியாக அழைத்துவந்து பேராலயத்திற்குள் அமர வைத்தனர்.

★ மாலை 04.00 மணிக்கு மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகை தலைமையில் திருமணத் திருப்பலி தொடங்கியது. மேநாள் ஆயர் இவோன் அம்புரோஸ் ஆண்டகையும் இவ்விழாவில் கலந்து சிறப்பு சேர்த்தார்கள். மண்டபத்திலிருந்து ஆயர் ஸ்டீபன் அவர்களே 14 திருமாங்கல்யங்களையும் தாம்பூலத்தட்டில் சுமந்து வந்து நற்கருணைப் பீடத்தில் வைத்தது அனைவரையும் நெகிழ வைத்தது. தாலிகட்டும் நேரத்தில் ஒவ்வொரு மணஇணையாக திருப்பீட முற்றத்திற்குள் அழைக்கப்பட்டனர். மேதகு ஆயர் அவர்கள் மணமக்களையும், தாலியையும் ஆசீர்வதிக்க, நன்றிப் பாடலுடன் மணமகன் திருமாங்கல்யம் பூட்டினார். தொடர்ந்து, ஓர் அருள்தந்தை மணமக்களின் மணமாலைகளை ஆசீர்வதித்துத் தர, மணமக்கள் மாலை மாற்றிக்கொண்டார்கள். திருப்பலியின் நிறைவில் 14 மண இணையர்களும் மேதகு ஆயர்கள், அருள்தந்தையர்கள், அருள்சகோதரிகளுடன் குழுப் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். இரண்டு ஆயர்களுடன் சேர்த்து மொத்தம் 25 அருள்பணியாளர்கள் இந்த விழாவில் கலந்து சிறப்பித்தனர்.

★ திருப்பலி முடிந்ததும், பேராலய தேர் வளாகத்தில் கண்ணைக் கவர்ந்த பிரம்மாண்டமான மேடையில் மணமக்களுக்கு வரவேற்பு வழங்கப்பட்டது. மேடையில் மணமக்களுடன் மேதகு ஆயர் ஸ்டீபன், ஆயர் இவோன் அம்புரோஸ், பேரருள்திரு. ச.தே. செல்வராஜ் மற்றும் பேராளர்கள் பொனோ ரோச், ஜேசையா வில்லவராயர் ஆகியோர் அமர்ந்திருந்தனர். மேதகு ஆயர் ஸ்டீபன் அவர்கள் 14 கேக்குகளையும் ஆசிர்வதித்துத் தர, 14 இணைகளும் தனித் தனியாக கேக்



அபினாஷ் - சுதா



மரிய செல்வம் - அமலா



அர்ஜுன் - அபிஷேகா



மரிய ரத ஆகாஷ் - ஸ்நோபியா





அம்பிரிஸ் - ஷாம்லி



மார்ஷல் - அனுசியா



செபஸ்தியான் - மரிய லைலா



டெனிஃபர் - ஜெஃப்ரின்

வெட்டினர். தொடர்ந்து, மணமக்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பேராலயத்தின் சார்பாக மணமக்களுக்கு ஸ்டீல் பீரோ, கட்டில், மெத்தை, பாத்திரங்கள், துணிமணிகள் சீர்வரிசையாக வழங்கப்பட்டன. திருவிவிலியம், செபமாலை, பனிமய அன்னை படம் ஆகியனவும், கூடுதல் பரிசுகள் பேராலயப் பக்த சபைகளின் சார்பாகவும், தனி நபர்களின் சார்பாகவும் வழங்கப்பட்டன. இந்திய ஒலிம்பிக் சங்கத் துணைத் தலைவர் தொழிலதிபர் திரு. ஜேசையா வில்லவராயர் 14 மணஇணையர்களுக்கும் ஆளுக்கொரு எல்.ஈ.டி. தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும் என்று மேடையில் அறிவித்தது பலத்த கைதட்டலைப் பெற்றது. தொடர்ந்து, பேராலயப் பஜனைக் குழுவினரின் பஜனைகள், இன்னிசைக் கச்சேரி இடம் பெற்றன. இறைமக்கள் அனைவருக்கும் கேக், குளிர்பானம் வழங்கப்பட்டது.

- ★ வரவேற்பு முடிந்ததும், மணமக்கள் ஸ்நோ அரங்கம் சென்று மேதகு ஆயர்கள், அருள்பணியாளர்கள், துறவியர், சிறப்பு விருந்தினர்களுடன் இணைந்து விருந்து உண்டது ஒரு மறக்கவியலாத அனுபவமாக இருந்தது. முதல் பந்தி முடிந்தபின்னர், மணமக்களின் பெற்றோரும், உறவினர்களும், அதைத் தொடர்ந்து வந்திருந்த அனைவரும் விருந்தில் பங்கேற்றனர்.
- ★ தஸ்நேவிஸ் மாதாவின் திருப்பெயரில் நடத்தப்பட்ட இந்தக் கூட்டுத் திருமண விழாவுக்கு மொத்தம் ரூ. 30,06,067 செலவாகியுள்ளது. இறைவனின் பேரிரக்கத்தாலும், பனிமயத் தாயின் ஆசியாலும், 212 பேரிடமிருந்து ரூ. 23,62,880 நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளது. பேராலயத்தின் சார்பாக ரூ. 6,43,187 தரப்பட்டுள்ளது. நன்கொடை தவிர, 10 பேர் பொருளாகப் பரிசுகள் வழங்கினர்.
- ★ வரலாற்று சிறப்பு மிக்க இந்த கூட்டுத் திருமண விழாவில் 14 மண இணையர்களின் 28 குடும்பங்கள் மகிழ்ந்தனர், பனிமய அன்னைப் பேராலயப் பங்கினர் பெருமிதம் கொண்டனர், தூத்துக்குடி மாநகர மற்றும் மறைவட்ட அருள்தந்தையர், துறவியர், இறைமக்கள் வாழ்த்தினர். இறைவனுக்கு நன்றி, பனிமயத் தாயே வாழ்க!





# விவிலியப் போட்டி 89

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

## லூக்கா நற்செய்தி அதிகாரம் 1 - 4

**பொருத்துக :**

| | | |
|---|---|---|
| 1. ஏலியின் மகன் | - | எலிசபெத்து |
| 2. கடவுளின் மகன் | - | செக்கரியா |
| 3. ஆரோனின் வழிவந்தவர் | - | யோவான் |
| 4. குருத்துவப் பணி | - | கபிரியேல் |
| 5. பானுவேலின் மகள் | - | மரியா |
| 6. இறைப்பற்றுக் கொண்டவர் | - | எருசலேம் |
| 7. ஆண்டவர் பார்வையில் பெரியவர் | - | சிமியோன் |
| 8. பாஸ்கா விழா | - | ஆதாம் |
| 9. கடவுளின் திருமுன் நிற்பவன் | - | யோசேப்பு |
| 10. நான் ஆண்டவரின் அடிமை | - | அன்னா |

**விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.06.2022**

# விவிலியப் போட்டி 88

## மே 2022 விடைக்குறிப்புகள்

**உரோமையர் அதிகாரம் 1 - 16**

| | |
|---|---|
| 1. அன்பு | உரோமையர் 18:9 |
| 2. அமைதி | உரோமையர் 15:33 |
| 3. இரக்கம் | உரோமையர் 9:16 |
| 4. பரிவு | உரோமையர் 2:4 |
| 5. மகிழ்ச்சி | உரோமையர் 12:12 |
| 6. கருணை | உரோமையர் 9:25 |
| 7. இறையச்சம் | உரோமையர் 3:18 |

**தூய ஆவியின் கொடைகள் :**
அன்பு, அமைதி, இரக்கம், பரிவு, மகிழ்ச்சி, கருணை, இறையச்சம்

## உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயர், குடும்ப அட்டை எண் மூன்றையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம் :

**93458 16875**

**அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.**

## சிறப்புப் பரிசு

2021 ஜூலை முதல் 2022 ஜூன் வரையுள்ள 12 மாதங்களிலும் சரியான விடை எழுதியோருக்கு சிறப்புப் பரிசு ஒன்று வழங்கவிருக்கிறோம். எனவே, 12 மாதங்களிலும் சரியான விடை எழுதி, உங்கள் பெயர் பனிமயம் இதழில் அச்சிடப்பட்டிருந்தால், சகோ.கிளிண்டன் (எண்: 93458 16875) அவர்களைத் தொடர்பு கொள்ளவும். அதனை உறுதி செய்தபின், பரிசு வழங்கப்படும்.

**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 137**

## I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 85

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. செபமாலை மாதா அன்பியம் **சகாயம்மாள் பெனடிக்ட்**
2. ஜூடு அன்பியம் **டிரைபேனா**
3. காவல்தூதர் அன்பியம் **ட்ரினிஷா**
4. குழந்தை தெரசா அன்பியம் **ஷோபனா கோமஸ்**

**விடை எழுதிய அன்பியங்கள் : 26**

**பாராட்டுக்குரியவர்கள் : 81**

5. அருள்சகோ. ரோசம்மாள்
6. அருள்சகோ. சோஃபியா

**அந்தோனியார் அன்பியம்**

7. சரோஜா
8. பிருந்தா சார்லஸ்
9. ஜெயா
10. லூர்காஸ் சகாயம்
11. ரீனா மொறாயிஸ்

**அன்னை தெரசா**

12. ரெய்சா சுஜய்
13. சுகன் மோனிஷா
14. சுரேஷ் பிரேமா
15. நமிஷா
16. ஜூலியஸ் ஜெயரூபி

**அன்னை வேளாங்கன்னி**

17. டென்சி
18. ரிஷாலின்
19. அவிலா
20. நான்சி

**கிறிஸ்தரசர்**

21. ஜூலியட் சாவியோ
22. ஸெலஸ்கி கிளமென்ட்
23. இவாஞ்சலின்

**தஸ்நேவிஸ் மாதா**

ஒருவருமில்லை

**திவ்யபாலன் அன்பியம்**

24. சகாயராணி தனராஜ்
25. பிரின்சி சே.

**பாத்திமா மாதா**

26. ஜெசிந்தா கான்ஸ்டன்
27. ஆன்ட்ரியா டாரல்
28. பினோரின் ஜீவிதா
29. ஜஸ்டின் ஸ்நோ குளோரி

**இரக்கத்தின் மாதா**

30. சித்ரா மோத்தா

**ஜெபமாலை மாதா**

31. கல்யாணி செல்வராஜ்

**ஜூடு அன்பியம்**

32. டெரன்சியா அரிஸ்டோ
33. அந்தோனிசாமி

**காவல் தூதர்**

34. வெனிட்டாள்
35. ஜெயா அகஸ்டின்
36. ஹசினா ஜோனத்தான்

**குழந்தை தெரசா**

37. கிறிஸ்டி லிஸ்டன்

**குழந்தை இயேசு**

38. அந்தோனியப்பா பிச்சம்மாள்
39. மோனிகா செபாஸ்டின்
40. எமல்டா

**லூர்து மாதா**

41. ஆலிவர் ஜெனோரா
42. ஃபிலோ கோமஸ்
43. ஜெனோ சேவியர்
44. ரம்யா
45. சான்டினா
46. ரோஸ்லின் தாமஸ்

**மணல் மாதா**

47. கெயிட்டன் ஃபர்னான்டோ
48. ரொசாரி கோமஸ்

**மிக்கேல் அதிதூதர்**

ஒருவருமில்லை

**பனிமய அன்பியம்**

ஒருவருமில்லை

**பவுலடியார்**

49. லீமாரோஸ் ஜாய்
50. ராஜா ரோஸ்லின்
51. ஜான்சன் ஒஃபிலியா

**பரிபூரண மாதா**

52. மெடோனா
53. ஜெனிஷா

**பொம்பெயி மாதா**

54. டயானா டெரிக்
55. லூடா கான்ஸ்டன்
56. மாத்யூ கர்டோசா
57. இம்மாக்குலேட்
58. ஜான்சிராணி
59. டிஃபானி அண்டோ
60. விபா மேக்னா

**இராயப்பர்**

61. ஷைனி
62. நேவிசம்மாள்
63. டெய்சி

**சவேரியார்**

64. டெலிலா அமலன்
65. ரூபா மனுவேல்
66. அண்டன் சகாயம்
67. ஆரோக்கியராஜ் ஹெலினா

**செபஸ்தியார்**

68. அந்தோனியம்மாள் டென்சிங்
69. ஜெசிலா சேவியர்

**சிந்தாத்திரை மாதா**

70. டிஜேபிஆர் இராயன்
71. நேசம்

**சிறுமலர் அன்பியம்**

72. ஒஃபிலியா தாமஸ்
73. எல்சிட்டா ஆனந்தன்
74. செலஸ்டின்

**சூசையப்பர்**

75. கிறிஸ் ரிஜோ
76. ரூபி கொர்னேலியுஸ்
77. மென்சி
78. மேரி ஜூபினா

**திருச்சிலுவை**

79. கைத்தான் ரமணி
80. கில்டன் சரோலின்
81. தெரசா பிரகாஷ்

**வியாகுல மாதா**

82. ரூமா
83. கெலின்டன்
84. மார்சல்
85. ஃப்ராங்ளின் லூடி

## II. இதர பங்குகளிலிருந்து விடை அனுப்பியவர்கள் : 52

### பரிசு பெறுபவர்கள் : 4

1. திண்டுக்கல் **ரொசாலி**
2. தூத்துக்குடி சகாயமாதா **சங்கீதா**
3. சென்னை ஆவடி **ஒஃபிலியா தாமஸ்**
4. தூத்துக்குடி பாத்திமாநகர் **ரபீனா சுரேஷ்**

### பாராட்டுக்குரியவர்கள் : 48

**ஆலந்தலை**
86. ஃபொன்சேகா
87. மரியம்மாள்
88. சகாயராணி
**ஆறுமுகனேரி**
89. தொம்மை அந்தோனி
**சேதுக்குவாய்த்தான்**
90. ஞானம் பாலசிங்
**சென்னை**
91. கமலஜோதி ஜெயசீலன்
**பாளையங்கோட்டை**
92. பிரேமா குணசீலன்
93. சொர்ணா ஃபர்னான்டோ
94. டெனிசா
**கயத்தாறு**
95. அமல்ராஜ்
**உரியூர்குப்பம்**
96. அருள்சகோ. லெட்டீசியா
**பட்டுக்கோட்டை**
97. ரோஸ் மேரி, பெரியகுளம்
98. குழந்தை தெரஸ்
**திண்டுக்கல்**
99. ஜெர்மோன்
100. மரிய மதலேன்
**கோவை பல்லடம்**
101. பிரான்சிஸ் ஆர்லன்
102. ஆஷா தனசீலன்
**திருச்சி**
103. மோனிட்டா கிறிஸ்டி
104. மேத்யூ விவேக்
**மதுரை**
105. அருள்சகோ. அப்போலின்
**வடக்குத்து**
106. ஹென்றிதாஸ்
**கன்னியாகுமரி**
107. சராஃபின் ஜோசப்

**தூத்துக்குடி நகர பங்குகள்**

**திரு இதயங்களின் பேராலயம்**
108. பெனிட்டா
109. எல்சி
110. சுசீலன்
111. ரமோலா கமிலஸ்
112. ரிமோல்டா
113. ஜூலியட் வாஸ்,
**குருஸ்புரம்**
114. செ.தா. ஆசீர்வாதம்
115. தமிழ்ச் செல்வன்
**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
116. சுகிர்தா
117. செரினா
118. செல்லம் டெலிஷியா
**யூதா ததேயு கோவில்**
119. ரோஸ் சேவியர்
**காந்திநகர்**
120. சாந்தினி
121. ரியாலினோ
122. ரமேஷ் நர்மதா
123. பேபி வால்டர்
**அன்னை வேளாங்கன்னி கோவில்**
124. வினிஃப்ரட் பிரின்ஸ்டன்
125. விஜியா பர்னாந்து
126. ஜெசிந்தா ஃபர்னான்டஸ்
**இஞ்ஞாசியார்புரம்**
127. சூசை நெவின்
**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
128. விர்ஜின்
**அந்தோனியார் கோவில்**
129. மென்சிலா லொயோலா
**லூர்தம்மாள்புரம்**
130. ரெனிஸ்டன் ஜெர்லின்
**திரேஸ்புரம்**
131. கோல்வின் சேசுராஜ்
**புனித சார்லஸ் கோவில்**
132. சகாயிட்டா மச்சாது
133. ஸ்டெல்லா குமார்



**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 142**

**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 137**

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 35)

## ஜூன் - 2022

| | | | |
|---|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | அருள்முனைவர் குமார்ராஜா | 94431 47823 |
| உதவிப் பங்குத் தந்தை | : | அருள்பணி பவுல் ரோமன் | |
| களப் பணியாளர் | : | சகோதரர் பெல் கிளிண்டன் | 9345816875 |
| பங்கு அலுவலகம் | : | | 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | சனிக் கிழமைகளில் | | ஞாயிற்றுக் கிழமைகளில் | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை **5.00, 6.30, 8.00** | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை **9.30** | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை **5.30** | திருப்பலி |
| | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை **6.30** | நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** தினமும் காலை 06.00 - 06.30
சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00

- ✓ திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)
- ✓ புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).
- ✓ திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.
- ✓ ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30
- ✓ திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 04.30 - 06.00
- ✓ விவிலியப் பாசறை : செவ்வாய் மாலை 06.15 - 08.00
- ✓ அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்
- ✓ உறுதிப்பூசுதல் அருள்சாதனம் : 29.05.2022
- ✓ புதுநன்மை அருள்சாதனம் : 31.07.2022

பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : காலை 10.00 மணி - 01.00 மணி
  மாலை 04.30 மணி - 05.30 மணி
- ✓ இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.
- ✓ நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். அலைபேசியில் பேசாமல், நேரிலே வந்துவிடுங்கள்.

## பனிமயச் சுவடுகள்

### (பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)

355. பனிமயப் பாசறை (80) கடந்த 26.04.2022 செவ்வாய் மாலை “திப நூலின் வியத்தகு மாந்தர்” என்னும் தலைப்பில் அந்தோனியார் அரங்கில் நடைபெற்றது. **44** பேர் கலந்துகொண்டனர். திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து நடத்தப்பட்ட போட்டியில் 10 பேர் கலந்துகொண்டனர்.

356. சென்னையைச் சேர்ந்த **திரு. லியோனார்ட் மொரால்** அவர்கள் வழங்கிய உணவுப் பொருள்கள், துணிமணிகள், வாளி ஆகியன அடங்கிய நலத்திட்ட உதவிகள் கடந்த 28.04.2022 வியாழன் மாலை 05.00 மணிக்கு நேவிஸ் அரங்கத்தில் நடைபெற்ற சிறிய விழாவில் நமது பங்கின் நலிந்த 15 பெண்களுக்கு வழங்கப்பட்டது. அன்னாரின் குடும்பத்தைப் பனிமயத் தாய் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

357. “அரசுத் தேர்வு எழுதவிருக்கும் மாணவர்கள் மற்றும் போட்டித் தேர்வுகளில் பங்கேற்கவிருப்போருக்காக” பனிமயத் தாயிடம் பரிந்து மன்றாடும் சிறப்பு வழிபாடு கடந்த **01.05.2022 ஞாயிறு** காலை 10.45 முதல் 12.00 வரை நமது பேராலயத்தில் நடைபெற்றது. தங்களின் பெயர்களைப் பதிவு செய்து கலந்துகொண்ட 100 பேருக்குப் பனிமயத் தாயின் பாதத்தில் வைத்த பேனாக்கள் ஆசிர்வதிக்கப்பட்டு வழங்கப்பட்டன.

358. மாதத்தின் முதல் சனியாகிய 07.05.2022 அன்று நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 மணி வரையில் கூட்டுத் திருமண 14 மண இணையர்களுக்காகவும், கூட்டுத் திருமண நன்கொடையாளர்களுக்காகவும் **சிறப்பு நோன்பு வழிபாடு (19)** நடைபெற்றது. மாலையில் சப்பரப் பவனியும், நற்கருணை ஆசீரும் நடைபெற்றன. இவை நேரலையாகவும் ஒளிபரப்பப்பட்டன.

359. பேராலயப் பங்கின் வரலாற்றுச் சிறப்பு மிக்க நாளாக 08.05.2022 ஞாயிறு அமைந்தது. அன்று மாலை 04.00 மணிக்கு தூத்துக்குடி மறைவட்டத்தைச் சேர்ந்த **14 மணஇணையர்களுக்கு மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகை** அவர்கள் தலைமையில் தஸ்நேவிஸ் மாதா கூட்டுத் திருமணம் நடைபெற்றது. தொடர்ந்து, தேர் வளாகத்தில் வரவேற்பு நிகழ்வும், பின்னர் ஸ்நோ அரங்கில் திருமண விருந்தும் நடைபெற்றது..

360. பேராலயப் பங்கின் உதவிப் பங்குத் தந்தை விமல்ஜேன், களப் பணியாளர் சகோ. அசாத் இருவருக்கும் **பிரியாவிடை நிகழ்வு** 10.05.2022 செவ்வாய் மாலைத் திருப்பலியின் நிறைவில் நடைபெற்றது. அன்பியங்கள், பக்த சபையினர் பொன்னாடை போர்த்தி, அன்பளிப்புகள் வழங்கினர்.

361. பனிமயப் பாசறை (81) 15.05.2022 ஞாயிறு மாலை “மகிழ்ச்சிக்கான விவிலியப் பரிந்துரைகள்” என்னும் தலைப்பிலும், பனிமயப் பாசறை (82) 29.05.2022 ஞாயிறு மாலை “துணையாளராம் தூய ஆவியார்” என்னும் தலைப்பிலும் அந்தோனியார் அரங்கில் நடைபெற்றது. முறையே **45** மற்றும் **47** பேர் கலந்துகொண்டனர்.

362. நமது பேராலயப் பங்கின் முதன்மை பக்த சபையான **புனித பொம்பெயி செபமாலை மாதா சபை**யினர் தங்களின் **119ஆம்** ஆண்டுத் திருவிழாவை 15.05.2022 ஞாயிறு காலைத் திருப்பலியில் கொண்டாடினார்கள். திருமதி. **வெர்ஜினியா** தலைமைப் பொறுப்பை நிறைவு செய்ய, திருமதி. **விஜிலியா** புதிய தலைவியாகப் பொறுப்பேற்றுக்கொண்டார்கள். காலையில் காலை உணவைப் பகிர்ந்து களித்த சபையினர், மாலையில் பங்குத் தந்தையின் தலைமையில் விழாக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

363. நமது பேராலயத்தில் 21.05.2022 சனிக்கிழமை மாலையில் நடைபெற்ற **திருச்செபமாலை வழிபாடு** ஒளிப்பதிவு செய்யப்பட்டு, 31.05.2022 ஞாயிறு அன்று **மாதா தொலைக்காட்சியில்** ஒளிபரப்பு செய்யப்பட்டது.

## பங்கில் நிகழ்ந்தவை



### *வரவேற்கிறோம்*

### 1. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | குழந்தை | பெற்றோர் | திருமுழுக்கு நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 96. | ஸ்டீவ் வால்டோ | மெல்பெர் சேவியோ-ஹாசல் | 01-05-2022 | குழந்தை இயேசு |
| 97. | கிரியோன் | டேவிட் - சத்யா | 01-05-2022 | சூசையப்பர் |
| 98. | வேஸ்லிபிரைய்ன் | ஜான்பால் - ரிபினாராணி | 01-05-2022 | சவேரியார் |
| 99. | கியன் லூயானல் | மைக்கேல்ராஜ்- ஆன்சி | 15-05-2022 | சூசையப்பர் |
| 100. | ஜெராமீல் ஜோஹன் | ஜோஸ்வா- லாவன்யா | 22-05-2022 | பொம்பெயி மாதா |



### *வாழ்த்துகின்றோம்*

### 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | புதுநன்மை நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 105. | ஆரோன் கிறிஸ் | விஜயன்-சுகிர்தா | 14-05-2022 | பனிமயம் |
| 106. | ஆல்ட்ரிச் | ராஜா-பிரவீனா | 15-05-2022 | செபஸ்தியார் |



### *ஆசி கூறுகின்றோம்*

### 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | திருமணநாள் | அன்பியம் |
|---|---|---|---|
| 90. | அஷ்வின் - ரேச்சல் | 04-05-2022 | அந்தோணியார் |
| 91. | ஜோனிஸ் - கிளெய்னா | 04-05-2022 | அந்தோணியார் |
| 92. | வினித் - லூர்துமேக்ரினா | 06-05-2022 | காவல்தூதர் |
| 93. | நிஷாந்த் - பிஜோல் | 18-05-2022 | குழந்தை இயேசு |
| 94. | ஜோஃப்ரின் வாஸ் - சான்ட்ரா | 25-05-2022 | சிறுமலர் |



### *இறைவனைப் போற்றுகிறோம்*

### 4. நோயில்பூசுதல் பெற்றவர்கள்

| எண் | பெயர் | பொறுப்பாளர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 22 | ஜெயந்தியம்மாள் | ஜூடு | 09.05.2022 | வியாகுலமாதா |
| 23 | வில்பிரட் | ராணி | 16.05.2022 | சூசையப்பர் |
| 24 | சிந்தாத்திரை | அந்தோணிதாசன் | 18.05.2022 | ஜெபமாலை |





*செபிக்கின்றோம்*

## 5. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | கணவர் / மனைவி | இறந்தநாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 124. | வில்பிரட் | ராணி | 16.05.2022 | சூசையப்பர் |

## நடைபெற இருப்பவை

- ★ 02.06.2022 முதல் வியாழன் அன்று மாலைத் திருப்பலி முடிந்ததும், நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு **திருமணி ஆராதனையும், நற்கருணை ஆசீரும்** நடைபெறும். தொடர்ந்து, ஒப்புரவு அருள்சாதனம் வழங்கப்படும்.
- ★ 03.06.2022 தலைவெள்ளி அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.
- ★ **04.06.2022 முதல் சனியன்று மாலைத் திருப்பலி**யும், சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். அவை நமது ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும், சூர்யா தொலைக்காட்சியிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.
- ★ 18.06.2022 அன்று **மூன்றாம் சனி நோன்பு வழிபாடு (20)** நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை "நோயாளர்கள் நலம் பெற" என்னும் கருத்துக்காக நடைபெறும்.

### திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

- ★ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.
- ★ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.

| எண். | நாள் - கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|
| 80. | 07.06.2022 செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | தூய ஆவியின் கனி : அன்பு |
| 81. | 14.06.2022 செவ்வாய் | அருள்பணி. மார்ட்டின் குமார் | தூய ஆவியின் கனி : அமைதி |
| 82. | 21.06.2022 செவ்வாய் | அருள்பணி. கிராசிஸ் | தூய ஆவியின் கனி : மகிழ்ச்சி |
| 83. | 28.06.2022 செவ்வாய் | அருள்பணி. ஜெரால்ட் ரவி | தூய ஆவியின் கனி : கனிவு |
| 84. | 05.07.2022 செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | தூய ஆவியின் கனி : பொறுமை |

# உலகின் அறநெறிக் காவலன்!

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்வின் பண்பும் பயனும் அது” என்றார் வள்ளுவர். இல்வாழ்வுக்கு அழகு அன்பும், அறநெறிகளும் என்னும் அவரது படிப்பினையை உலகு ஏற்றுக்கொண்டுள்ளது.

“உலகில் அறம் வாழவேண்டும், மறம் வீழவேண்டும்” என்பதே அனைத்துச் சமயங்களின் நோக்கம். அறநெறிகளையும், ஒழுக்கவியலையும் பேணாத எந்தவொரு சமயமும், அதன் வழிபாடுகளும் வீணே என்று உறுதியுடன் சொல்லலாம்.

நம்பிக்கையும், அறநெறிகளுமே (faith and morals) “ஆன்மீகம்” எனப் போதிக்கிறது கத்தோலிக்கத் திருஅவை. அறநெறிகளும், ஒழுக்கமுமற்ற வாழ்வும், வழிபாடும் பொருளற்றவை, இறைவனுக்கு எதிரானவை எனத் தொடக்க முதலே கற்பித்து வருகின்றது நம் திருஅவை. கிறித்தவர்கள் அறநெறிகளோடு வாழ வலியுறுத்துவதோடு, கிறித்தவரல்லாத உலகினரும் அறநெறியோடு வாழ்தல் தேவை எனவும் போராடி வருகிறது நம் தாய்த் திருஅவை.

தனது உறுப்பினர்களிடமும், உலக மக்கள் அனைவரிடமும் அறநெறிகளையும், நல்லொழுக்கத்தையும் எதிர்பார்க்கிறது கத்தோலிக்கத் திருஅவை. இதில் தொடக்கத்திலிருந்தே உறுதியான நிலைப்பாட்டை எடுத்து, இன்றுவரை உலகின் அறநெறிக் காவலனாகத் திகழும் நம்; திருஅவை பற்றி நிச்சயமாக நாம் பெருமைப் படலாம்.

புதிய ஏற்பாட்டில் இயேசுவின் போதனைகளிலும், பவுலடியாரின் அறிவுரைகள் மற்றும் கடிந்துகொள்வதிலும் திருஅவையின் அறநெறிக் கோட்பாடு தொடங்குகிறது. இன்றளவும் குருமடங்களில் குருத்துவப் பயிற்சியின்போது **“அறநெறியியல்”** (Moral Theology) என்பது இறையியலின் ஒரு கட்டாயப் பாடமாக இருக்கிறது என்பதிலிருந்து அறநெறியியலுக்குத் திருஅவை தரும் முதன்மைத்துவத்தை அறியலாம்.

இயேசுவால் நிறுவப்பட்ட திருஅவை நம்பிக்கை, அறநெறிப்போதனைகள் இரண்டிலும் தவறா வரம் பெற்றது (infallible in faith and morals) என்பது நமது நீண்டகால நம்பிக்கை. நல்லது எது, தீயது எது என்பதைப் பற்றிய தெளிவான போதனைகளைத் தருவதே அறநெறியியல். இந்த அறநெறியியல் விவிலியம் மற்றும் திருஅவையின் வல்லுநர்கள், திருத்தந்தையர்களின் போதனைகள், திருஅவைச் சட்டம் ஆகியவற்றோடு அறிவியல் உண்மைகள், பகுத்தறிவு, மானிட அனுபவங்கள் என்பனவற்றின் அடிப்படையிலும் அமைந்துள்ளது. மானிட வாழ்வின் அனைத்துத் தளங்களிலும் அறநெறி ஒழுங்குகளை வலியுறுத்துகிறது திருஅவை. நம் திருஅவையின் முதன்மையான சில அறநெறிக் கட்டளைகளை நினைவுகூர்ந்து நாம் பெருமிதம் கொள்ளலாம்.

**1. மணவாழ்வின் முறிவுபடாத் தன்மை.** “கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்” (மத் 19:6) மற்றும் “தம் மனைவியை விலக்கிவிட்டு வேறொருவரை மணப்பவர் விபச்சாரம் செய்கிறார்” (லூக் 16:18) என்னும் இயேசுவின் போதனையை அடிப்படையாகக் கொண்டது மணமுறிவுக்கெதிரான திருஅவையின் நீள்மரபுப் போதனை. மணமுறிவு பெற்று, மறுமணம் செய்வோர் நற்கருணை பெறக்கூடாது என்னும் கட்டளை



இந்தப் போதனையின் தீவிரத்தை உணர்த்துகிறது.

அதே வேளையில், ஏமாற்றுதல், பாலுறவுகொள்ள இயலாமை போன்ற காரணங்களால் சில திருமணங்களைச் "செல்லாது" (annulment of marriage) என அறிவிக்கும் உரிமையைத் திருஅவையின் மண நீதிமன்றங்கள் பெற்றுள்ளன என்பதுவும் இன்னொரு பெருமிதம் தரும் வியப்பான செய்தி. (காண்க: க. தி, மறைக்கல்வி எண்: 2382-84).

**2. கருக்கலைப்புக்கு எதிரான போதனை.** முதல் நூற்றாண்டிலிருந்தே கருக்கலைப்புக்கு எதிராகக் குரல் கொடுத்து வந்திருக்கிறது நம் திருஅவை. தாயின் வயிற்றில் வளரும் கருவை அழிப்பதைக் கொலையாகவே போதிக்கிறது. இதனை எவ்வளவு பெரிய அறநெறிக் கொடுமையாக திருஅவை கருதுகிறது என்றால், கருக்கலைப்பு செய்வோர் **"தாமாகவே திருஅவை விலக்கம் பெறுகின்றனர்"** (automatic excommunication) என்கிறது கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி (எண்: 2271).

அதே வேளையில், தாயின் உயிரைக் காக்கும்போதோ, அல்லது தாய்க்கு சிகிச்சை அளிக்கின்ற வேளையிலோ, அதன் மறைமுக விளைவாக கருக்கலைப்பு ஏற்பட்டால் அதனைப் பாவமாகக் கருதுவதில்லை என்பதுவும் கவனத்துக்குரியது.

**3. கருத்தடை :** கருத்தரிப்பதைத் தடுக்கும் நோக்குடன் செயற்கையாகப் பயன்படுத்தப் படும் அனைத்து கருத்தடைத் தடுப்பு முறைகளும் தவறு என்கிறது திருஅவை. 1968ஆம் ஆண்டு திருத்தந்தை ஆறாம் பவுலால் வெளியிடப்பட்ட **"மானிட உயிர்"** (Humane Vitae) என்னும் சுற்றுமடல் மானிட உயிரின் மாண்பைப் போற்றி, கருத்தடை உறைகள், மாத்திரைகள், அறுவை சிகிச்சைகள் அனைத்தையும் தவறு எனத் தெளிவு படுத்துகிறது.

அதே வேளையில், பொறுப்புள்ள பெற்றோர் அதிக எண்ணிக்கையில் குழந்தைகளை வளர்க்க இயலாத நிலையில், இயற்கை முறையில் கருத்தரித்தலைத் தடுக்கலாம் என்றும் திருஅவை பரிவுடன் சொல்கிறது. இத்தகைய **இயற்கைத் திட்டமிடலை** (Natural Family Planning) திருஅவை ஊக்குவிக்கிறது.

*தொடரும்...*

**"க்றிஸ் மிலியன்"**

# விண்ணக வாழ்வின்
# 25ஆம் ஆண்டு நினைவு

"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாய்த் திகழ்வாய்"
(எசா 62:3)



பிறப்பு
13.03.1936

இறப்பு
01.06.1997

## J. கஸ்பார் டிவோட்டா

எனது அன்புக் கணவரும் எங்கள் பாசமிகு தந்தையுமான
திரு. J. கஸ்பார் டிவோட்டா அவர்களின் இறைபதம் அடைந்த 25ஆம் ஆண்டு
01.06.2022 அன்று நிறைவுறுவதால் அன்னாருக்காக மன்றாட
உங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

அன்பு மனைவி :
**G. டெல்பின் டிவோட்டா**
மக்கள், மருமகன்கள், பேத்திகள், பேரன், பூட்டிகள்

### நினைவுத் திருப்பலி

**01.06.2022 புதன்கிழமை**
**காலை 06.30 மணி, மாலை 5.30 மணி**
**தூய பனிமய அன்னை பேராலயம், தூத்துக்குடி.**

55, பெரிய கோவில் தெரு, தூத்துக்குடி.

# நினைவு அஞ்சலி

| 22ஆம் ஆண்டு நிறைவு | முதலாம் ஆண்டு நிறைவு |
| --- | --- |
| தோற்றம் 03.12.1952 | தோற்றம் 10.06.1956 |
| மறைவு 27.02.2000 | மறைவு 21.06.2021 |
| **அலங்காரம் பர்னாந்து** | **மரிய கமலசீலி பர்னாந்து** |



என்றும் எங்கள் கண்களில் கண்ணீரை
காணவிரும்பாத நீங்கள் இன்று
கண்ணீரை மட்டும் எம் கண்களுக்கு
தந்துவிட்டு இனியென்றும் நாங்கள்
காணமுடியா இடம்நோக்கி சென்றதும்
ஏனோ?

இன்றும் இனியென்றும் உங்கள் நினைவுகளோடு

வாழும், வாடும் குடும்பத்தினர்

# FIRST YEAR REMEMBRANCE

Although I am absent in body but present in spirit ( 1 Cor 5:3 )



Blossomed
23.09.1957
Colombo

Wilted
03.05.2021
Chennai

Married
09.11.1981
Alanthalai

## Josephine Sugirtham Fernando M.Sc.,B.Ed.,

(Retd.Fatima Mat. Hr.Sec.School,Chennai-24)

*Amma! You are the light , the guiding*
*force & the foundation of our family*
*You put everyone ahead of yourself*
*Why you have forsaken us Amma ?*
*What was the necessity to leave us Amma ?*
*Where have you gone Amma ?*
*When will you come back Amma ?*
*Who will give us solace Amma ?*
*How can we digest this great loss Amma ?*
*Forever in our hearts you will stay*
*You are never far away*
*May Almighty God grant eternal peace to your soul*

Loving Husband : B.Ravichandran

Daughters : Jean,Rinu& Irene
Sons in law : Marinstine,Arun & Jeffray
Grand Children : Natheniel,Kathleen,Ira,IIan,Imaiya
Mother : Chinna Rani Fernando

SHINY Ph : 98421 31493